# DOCUMENTATION OF THE ARCHEOLOGICAL EVIDENCES FOUND WITHIN MUTHUR D.S DIVITION

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
26 FEB 2018
Vantharumoolai
Chenkalady

BY:

NAME : MS. PUVANESWARAN NIJANTHARUPINI

REG.NO : EU/IS/2011/AC/144

INDEX.NO : CS 4444

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA

THIS DISSERTATION SUBMITTED FOR THE PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENTS FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.

FAC500
Project Report
Library - EUSL

DEPARTMENT OF HISTORY

FACULTY OF ARTS AND CULTURE

EASTERN UNIVERSITY

SRI LANKA

2018.

PROCESSE
Main Library, EU

# முன்னுரை

தென்னாசியாவின் தென்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழும் நாடுகளில் ஒன்றான இலங்கை தனக்கே உரித்தான தனித்துவமான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டு காணப்படுகின்றது. தென்னாசியாவில் தொடர்ச்சியான இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பைக் கொண்ட இலங்கைத் தீவின் அமைவிடம், பௌதீக மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றின் காரணமாக, ஆரம்பகாலம் தொட்டு பல நாட்டவர்களும் இத்தீவின் மீது தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக ஈழத்துப் பண்பாடுகளோடு பிற நாட்டுப் பண்பாடுகள் கலப்புற்று, பல நாட்டுப் பண்பாடுகளோடு இணைந்த வகையில் ஈழத்தின் பண்பாடும், வரலாறும் கட்டியெழுப்பப்பட்டது. கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவிய போது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும், புதிய பண்பாடும் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாக பாளி இலக்கியங்களில் கூறப்பட்டாலும், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் நாகரிகமடைந்த பண்பாட்டு வரலாறு கொண்ட மக்கள் வாழ்ந்தமை, நம்பகரமான தொல்லியல் மூலாதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் புதிய பரிணாமத்தையும் திருப்பத்தையும் தோற்றுவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள மூதூர்ப் பிரதேசத்தை மையப்படுத்தியதான “மூதூர்ப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொல்லியல் சின்னங்களை ஆவணப்படுத்தல்” எனும் தலைப்பின் கீழான ஆய்வுக்கு பல மூலாதாரங்கள் முன்னோடியாக அமைந்து காணப்பட்டன. அந்தவகையில் இப்பிரதேச மக்களது வாழ்விடப் பகுதிகளிலிருந்து கிடைத்த பலதரப்பட்ட சான்றாதாரங்கள் மற்றும் இப்பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட தொல்லியல் ஆய்வாளர்களது ஆய்வு முயற்சிகள், ஆவணக்குறிப்புக்கள் போன்றவற்றின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்ட, குறிப்பிட்ட பிரதேசத்திற்குட்பட்ட மக்களது வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், மக்கள் தொகை, குடும்ப சமூக உறவுமுறைகள், வாழ்விடங்கள், உணவு உற்பத்தி முறைகள், தொழில் நுட்ப வளர்ச்சி, மத நம்பிக்கை, கலைமரபு, அழகியல், உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகள் போன்றவை இவ்வாய்வுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

இப்பிரதேசத்தை மாத்திரம் பிரதிநித்துவப்படுத்தி இதுவரை இலக்கிய ஆவணங்கள் அதிகம் வெளிவராத நிலையில் இப்பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு என்பன மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் இவ்வாய்வின் போது இப்பிரதேசத்தில் பரவலாக அடையாளம் காணப்பட்ட தொல்பொருட் சின்னங்களான பிராமி மற்றும் தமிழ்ச் சாசனங்கள், நாணயங்கள், கட்டட இடிபாடுகள், பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், ஐரோப்பியர் கால கட்டுமானங்கள், வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள், பழங்கால பாவனைப் பொருட்கள், வாழ்வியல்

எச்சங்கள், பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் என்பன இப்பிரதேசத்தினது தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தொல்லியல் சின்னங்கள் தற்போதைய காலங்களில் இனமத உணர்வுகளுக்கு உட்பட்டு, மறைக்கப்பட்டு, சிதைக்கப்படும் நிலையே தொடர்கின்றன.

பல அரிய வரலாற்றுத் தடயங்களைக் கொண்ட இப்பிரதேசத்தை மையப்படுத்தி இதுவரை முழுமையான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், இப்பகுதியில் எதிர்காலத்தில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமிடத்து, இப்பிரதேசம் தொடர்பான அரிய பல உண்மைகள் வெளிவர அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எமது பிரதேசத்தின் வரலாற்றை வெளிப்படுத்தி நிற்கின்ற இத்தொல்பொருட் சின்னங்களை ஆய்வுக்குட்படுத்தி, ஆவணப்படுத்தும் ஓர் முயற்சியாகவே இவ்வாய்வானது அமைகின்றது. எதிர்காலத்தில் இதுபோன்ற ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு, பல புதுமைகள் படைக்கவிருக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு திடமான ஓர் அடித்தளமாகவும், வழிகாட்டலாகவும் இவ்வாய்வு அமையும் என நம்புகின்றேன்.

-ஆய்வாளர்-

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| நன்றியுரை | i |
| முன்னுரை | ii |
| அத்தியாயம் : 01 ஆய்வு அறிமுகம் | 01 - 09 |
| அத்தியாயம் : 02 ஐதிகங்களும் மரபுகளும் | 10 - 24 |
| அத்தியாயம் : 03 சாசனங்கள் | 25 - 43 |
| அத்தியாயம் : 04 ஏனைய தொல்லியற் சான்றுகள் | 44 - 88 |
| அத்தியாயம் : 05 முடிவுரை | 86 - 91 |
| உசாத்துணை | 92 - 94 |
| பின்னிணைப்பு | i - ix |